**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 336/2019 |
| Name | : | Sakthivel |
| P.W. | : | 1 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 28.11.2023

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளம் அண்ணா நகரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2017 ம் வருடம் ஒரு நான் ஞாயிற்றுக் கிழமை நான் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்த போது என் சித்தப்பா வீட்டிற்கு வந்து கொழுமம் வரை சென்று வரலாம் என்று கூப்பிட்டார். நானும் எனக்கு சொந்தமான STAR CITY மோட்டார் சைக்கிளை நான் ஓட்ட என் சித்தப்பா என் பின்னால் உட்கார்ந்து கொமரலிங்கம் – உடுமலை ரோட்டில் நான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது பெட்ரோல் பங்க் அருகில் Eicher லாரி பெட்ரோல் பங்கில் இருந்து எந்தவித சைகையும் காட்டாமல் வடக்கு புறமாக திரும்பிய போது கிழமேல் ரோட்டில்

மேற்காக வந்து கொண்டிருந்த எங்கள் பைக்கின் பம்பர் மற்றும் புட் ரெஸ்டில் மேற்படி Eicher லாரி எவ்வித எச்சரிக்கையும் செய்யாமல் வந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது. எனக்கு தோள் பட்டையில் அந்த விபத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எனது பைக்கின் பின்னால் உட்கார்ந்து வந்த எனது சித்தப்பா சின்னப்பன் லாரியின் பின் சக்கரத்தில் விழுந்துவிட்டார். நான் கிழபுறம் விழுந்துவிட்டேன். என் சித்தப்பா சின்னப்பன் மீது லாரியின் பின் சக்கரம் ஏறியதில் அவரது இடது தோள் பட்டை மற்றும் நெஞ்சு அகிய இடங்களில் பலத்த காயம் பட்டு உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார். உடனே நான் அவரது மகன் கருப்புச்சாமிக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். கருப்புச்சாமி வந்து சின்னப்பனை ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனக்கு சிராய்ப்பு காயம் மட்டும் ஏற்பட்டதால் நான் மருத்துவமனை செல்லவில்லை. இது சம்மந்தமாக நான் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி Eicher லாரியை ஓட்டி வந்தவரை நான் விபத்து ஏற்பட்ட போது கவனிக்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் காவலர் எழுதினார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. எனக்கும், என் சித்தப்பாவுக்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கு விபத்தானது பெட்ரோல் பங்கிற்கு நேர் எதிரே நடந்தது. பெட்ரோல் பங்கில் இருந்து வெளியே வரும் போது விபத்து நடந்தது. பொதுவாக பெட்ரோல் பங்க் மற்றும் குறுக்கு சாலையில் இருந்து பிரதான சாலையை அடையும் இடங்களில் சாலையை பார்த்து தான் வாகனம் ஓட்ட வேண்டும் என்றால் சரிதான். நானும், எனது சித்தப்பாவும் சிக்கன் எடுக்க போன விவரத்தை போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பெட்ரோல் பங்கிற்கு கிழபுறப் பகுதியில் வடக்கு பகுதியில் அரசு மதுபான கடை உள்ளது என்றால் சரிதான்.

(2) இந்த வழக்கு விபத்து நடந்த போது எனது இருசக்கர வாகனத்தின் டாங்க்

கவரில் மது பாட்டில் இருந்தது என்றால் சரிதான். ஆனால் நான் மது அருந்தவில்லை. வழக்கு விபத்து நடந்த போது நானும், என் சித்தப்பாவும் மது அருந்திவிட்டு வந்து அப்போது கட்டுப்படுத்த முடியாமல் வாகனத்தை ஓட்டிச் சென்று Eicher லாரியின் பின் பக்கத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் நாங்கள் இருவரும் மது அருந்தவில்லை. மது வாங்கிக்கொண்டு தான் வீட்டிற்கு சென்றோம். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது இருசக்கர வாகனத்தின் உரிமையார் நான் அல்ல அதற்கு காப்பீடும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த போது எனது சித்தப்பா மருமகளுக்கு வளைகாப்பு என்றால் சரிதான்.

(3) எனது வாகனத்தின் முன் வலதுபுறத்தில் சேதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று நான் மது போதையில் கட்டுப்படுத்த முடியாமல் என் பைக்கை ஓட்டி வந்து தெற்கிலிருந்து வடக்காக பெட்ரோல் பங்கில் இருந்து திரும்பிய Eicher லாரியின் மீது பின்புறம் சென்று மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

K VIJAYAKUMAR

Digitally signed by K VIJAYAKUMAR
Date: 2023.11.28 15:46:03 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 336/2019 |
| Name | : Muthuramalingam |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 28.11.2023

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசித்து வருகிறேன். திருப்பூரில் பனியன் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சின்னப்பன் எனது தாய் மாமா ஆவார். கடந்த 09.04.2017 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு கொழுமத்தில் எனது அப்பாவையும், தம்பியையும் பார்ப்பதற்காக எனது பைக்கில் பாப்பான்குளத்தில் இருந்து கொழுமம் நோக்கி போய் கொண்டிருந்த போது காலை 08.00 மணிக்கு அனுசியா பெட்ரோல் பங்க் அருகே கூட்டமாக 4, 5 பேர்கள் இருந்தார்கள். நான் போகும் போது விபத்து ஏற்பட்டிருந்தது. அ.சா.1 விபத்தில் அடிப்பட்டு லேசான காயத்துடன் இருந்தார்கள். எனது மாமா சின்னப்பனை இரண்டு பேர் பிடித்து உட்கார வைத்திருந்தார்கள். நாட்டுதுரை

மற்றும் கருப்புச்சாமிக்கு தகவல் சொல்லி விட்டு நான் விபத்து நடந்த இடத்தில் இருந்தேன். ஒரு வாடகை வண்டியை பிடித்து சின்னப்பனை உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். என் மாமா மருத்துவமனை செல்லும் போதே இறந்துவிட்டதாக சொன்னார்கள். பின்பு என் மாமாவின் உடலை பிரேத பரிசோதனை செய்து குல வழக்கப்படி அடக்கம் செய்ய கொடுத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி – கொமரலிங்கம் – உடுமலை ரோட்டில் சாமராயப்பட்டி அக்ஷயா பெட்ரோல் பங்க் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நான் வந்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது புறமாக TVS STAR CITY இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த சின்னப்பன் மற்றும் சக்திவேல் ஆகியோர் மீது ரோட்டின் தென் புறம் உள்ள பெட்ரோல் பங்கில் இருந்து தெற்கில் இருந்து வடக்காக வந்த கிழக்கு நோக்கி எந்த வித சைகையும் காட்டாமல், ஹாரன் அடிக்காமல் வந்த லாரி மோதியதில் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தடுமாறி கீழே விழுந்துவிட்டார்கள் என்றும், அதைப் பார்த்த நான் ஓடிச் சென்று பார்த்த போது எங்கள் ஊரைச் சேர்ந்த சக்திவேல், சின்னப்பன் என்று தெரிந்து அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், இந்த விபத்தை நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில் – சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) யாருடைய கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

கேள்வி – மேற்படி Eicher லாரியை ஓட்டி வந்த நபர் யார் ? என்று சம்பவத்தின் போது பார்த்தேனா என்றால் ?

பதில் – மேற்படி Eicher லாரியை ஓட்டி வந்தவர் சின்ன வீரம்பட்டியைச் சேர்ந்த

பஞ்சலிங்கம் ஆவார். அவர் ஆஜர் எதிரி தான். சம்பவ இடத்தில் இருந்தார். நான் பார்த்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் எனது போலீஸ் விசாரணையில் எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிடாமல் தற்போது போலீசார் சொல்லிக் கொடுத்து சம்பவ இடத்தில் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

K VIJAYAKUMAR

Digitally signed by K VIJAYAKUMAR
Date: 2023.11.28 15:46:10 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 336/2019 |
| Name | : Nattudurai |
| P.W. | : 3 |
| Father Name | : Chinnappan |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 28.11.2023

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசித்து வருகிறேன். தனியார் பேருந்து டிரைவராக வேலை செய்கிறேன். விபத்தில் இறந்த போன சின்னப்பன் எனது அப்பா ஆவார். கடந்த 09.04.2017 ம் தேதி காலை 08.45 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது அனுசியா பெட்ரோல் பங்கில் இருந்து சக்திவேலும், எனது அப்பாவும் இருசக்கர வாகனத்தில் கொழுமத் சென்றுவிட்டு திரும்பி வரும் போது பெட்ரோல் பங்க் அருகே eicher லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் உடனே அனுசியா பெட்ரோல் பங்கிற்கு வந்து பார்த்த போது எனது அப்பாவிற்கு வலது கை அடிப்பட்டிருந்தது உடனே ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு பரிசோதித்த

மருத்துவர்கள் என் அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன் பின்னிட்டு கொமரலிங்கம் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் நான் தான் கொடுத்தேன். கொமரலிங்கம் போலீசார் உடுமலை அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**
**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 336/2019 |
| Name | : Karuppusamy |
| P.W. | : 4 |
| Father Name | : Chinnappan |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 28.11.2023

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசித்து வருகிறேன். நான் மின் வாரியத்தில் ஒப்பந்த பணியாளராக சென்று வருகிறேன். விபத்தில் இறந்த போன சின்னப்பன் எனது அப்பா ஆவார். கடந்த 09.04.2017 ம் தேதி என் மனைவிக்கு வளைகாப்பு நிகழ்ச்சி இருந்ததால் நான் வீட்டில் இருந்த போது இருசக்கர வாகனத்தில் சக்திவேலுடன் என் அப்பா பின்னால் உட்கார்ந்து வந்த போது அனுசியா பெட்ரோல் பங்க் Eicher லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக முத்து ராமலிங்கம் எனக்கு தகவல் சொல்லி நானும், என் அண்ணனும் சென்று பார்த்த போது என் அப்பாவுக்கு கையில் அடிப்பட்டிருந்தது. உடனே ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு பரிசோதித்த

மருத்துவர்கள் என் அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். நாங்கள் புகார் கொடுத்தோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**
**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

K VIJAYAKUMAR
Digitally signed by K VIJAYAKUMAR
Date: 2023.11.28 15:46:16 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்